# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் கேரளாவிலுள்ள கோழிக்கோடு பள்ளிவாசலில்

## 28.11.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா ஆலி இம்ரானின் 9வது வசனத்தை ஓதினார்கள்:**

அல்லாஹ் எனக்கு இந்தியாவிலுள்ள இப்பகுதியிலும் வருவதற்கான தஃபீக்கை வழங்கியுள்ளான். அல்ஹம்துலில்லாஹ். 2005 ஆம் ஆண்டு நான் காதியான் வந்த சமயத்தில் கேரளாவிலுள்ள சில தூய அஹ்மதிகள் நீங்கள் கேரளா கண்டிப்பாக வரவேண்டும் என்று வற்புறுத்திக் கூறியிருந்தார்கள். ஆனால் அப்போதுள்ள நிலைமைக்கேற்ப உடனடியாக அதற்கான திட்டத்தை உருவாக்க முடியவில்லை. அப்போது நான் அவர்களிடம் இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் நான் அங்கு வர முயற்சி செய்வேன் என்று கூறியிருந்தேன். முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளால் நான் கூறியதை நிறைவேற்றுவதற்குரிய தஃபீக்கை அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ளான். ஒரு மனிதன் சுயமாக ஒரு பொருளை நேரில் காணாத வரை அது தொடர்பாக அவனுக்கு கிடைக்கும் தகவல்களை மட்டும் வைத்து அதோடு தொடர்புள்ள விஷயங்களை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. உங்களை நேரில் கண்டு உங்களது மனத்தூய்மையையும் பற்றையும் காண்பதற்கான சந்தர்பத்தை அல்லாஹ் எனக்கு வழங்கியதற்காக நான் அல்லாஹ்வுக்கு மேலும் நன்றி செலுத்துகின்றேன்.

இந்த மாநிலத்தைச் சார்ந்த அல்லது இந்தப் பகுதியைச் சார்ந்த அஹ்மதிகளில் எத்தனை பேரை காதியானில் நான் சந்தித்திருந்தேனோ அவர்கள் அனைவரையுமே அவர்களது மனத்தூய்மையிலும், பற்றிலும் நிறைந்திருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. ஆனால், இங்கு வந்து ஜமாஅத்திலுள்ளவர்களை பார்த்து ஒவ்வொரு ஆணையும், பெண்ணையும், சிறியவர்களையும் பார்த்து அவர்களிடமுள்ள மனத்தூய்மை மற்றும் ஆழ்ந்த பற்றின் உயர்வான தரத்தைப் பார்த்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தின் மீது இறங்கியுள்ள அல்லாஹ்வின் அருள்களை என்னால் கணித்துப் பார்க்க முடிகிறது. இதனை உங்களை சந்திக்காமல் நான் அறிந்திருக்க முடியாது. என்னுடன் வந்தவர்களில் ஒருவர் இவர்களிடம் இந்தோனேசியாவிலுள்ள அஹ்மதிகளைப் போன்ற Discipline-ம் மனத்தூய்மையும் இருக்கின்றது என்று கூறினார். இன்னொரு நபர் இவர்களிடம் ஆப்பிரிக்காவிலுள்ள அஹ்மதிகளிடமுள்ளது போன்ற மனத்தூய்மை இருக்கின்றது என்று கூறினார். ஆப்பிரிக்காவிலுள்ள அஹ்மதிகளிடம் உணர்வுப் பூர்வமான நிலை மிகுந்திருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. ஆனால் நான் கூறுவது என்னவென்றால், உலகிலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் உள்ள அஹ்மதிகளின் உணர்வும், மனத்தூய்மையும் ஈடு இணையற்றதாகும். அந்த மனத்தூய்மையையும் பற்றையும் அவர்கள் வெளிப்படுத்துகின்ற வழிமுறை பல்வேறு விதமானதாக இருக்கலாம். மேலும் இந்தியாவின் இப்பகுதியில் வாழ்கின்ற அஹ்மதிகள் தங்களது மனத்தூய்மையும் பற்றையும் வெளிப்படுத்துவதில் அவர்களுக்கென்று ஒரு வழிமுறையை வகுத்துள்ளார்கள். இந்த பகுதி காதியானிலிருந்தும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. இந்த பகுதியில் வாழும் அஹ்மதிகளில் ஒரு வேளை ஒரு பெரும் எண்ணிக்கை முதல் முறையாக நேரடியாக கலீஃபாவை சந்திப்பவர்களாகவும் இருக்கலாம். ஆனால் இவர்களில் சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் ஆகியோர் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதையும் அமைதியாக அவர்களது கண்களில் வெளிப்படும் ஆழ்ந்த பற்றையும் பார்க்கும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு பிறகு ஜமாஅத்தில் தொடர்ந்து நீடிக்கும் கிலாஃபத் அமைப்பின் மீது இவர்கள் வைத்திருக்கும் அன்பு மற்றும் ஆழ்ந்த பற்றின் உணர்வை அழித்து விடவும் அதற்கு தடையாக இருக்கவும், உலகிலுள்ள எந்த சக்தியாலும் முடியாது என்பதை என்னால் நேரில் கண்டு உணர முடிந்தது. இந்த உணர்வுகளைக் கண்ட பிறகும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட சீர்திருத்தவாதி என்பதில் ஏனைய முஸ்லிம்களுக்கு சந்தேகம் இருக்கின்றதா? என்பதை எண்ணிப் பார்க்கும்போது அது நம்மை மக்கள் அஹ்மதிகள் எந்த அளவு

மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள் என்பதை பார்க்கின்றார்கள். கிலாஃபத்தின் மீது இங்குள்ள அஹ்மதிகள் தமது அன்பையும் நேசத்தையும் வெளிப்படுத்துவதையும் பார்க்கும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பணியை தொடர்ந்து முன்னேற்றமடையும் விதத்தில் கொண்டு செல்வதற்காக மட்டும்தான் இந்த கிலாஃபத் அமைப்பு இருக்கின்றது. எனவே இந்த கயிற்றை பற்றிப்பிடிப்பதன் மூலமாகத்தான் நாம் முன்னேறிச் செல்ல முடியும் என்பதை அவர்கள் நன்றாக அறிந்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. மேலும் இதன் மூலமாகத்தான் அவர்கள் தங்களது வாழ்வின் இலக்கை அடைய முடியும் என்பதையும் அவர்கள் அறிந்துள்ளார்கள்.

நமது வாழ்வின் இலக்கு என்பது என்ன? அது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதேயாகும். அல்லாஹ்வின் திருப்தியை எளிதாக பெற்றுக் கொள்வதற்குரிய பணிகளை நாம் மரணிக்கும் வரை செய்து கொண்டே செல்ல வேண்டும். அல்லாஹ்வின் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடந்து வாழும் வகையில் அப்பணிகள் இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரும், காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் உருவாக்க விரும்பிய அந்த உயர்வான தரத்தை அடைய நாம் முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக இங்குள்ள அஹ்மதிகள் கிலாஃபத்தின் மீது வைத்திருக்கும் மனத்தூய்மையும் பற்றையும் நான் பார்த்தேன். இதனை தொடர்ந்து நிலைநாட்டுவது ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் கடமையாகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்வதுதான் நமது வாழ்வின் அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளும்போதுதான் இந்த நிலையை தொடர்ந்து நாம் நிலைநாட்ட முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடப்பதும் அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதும் நமது வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த உயர்வான தரத்தை அடைய முயற்சி செய்வதுதான் நமது இலக்காக இருக்க வேண்டும். இது இல்லாமல் கிலாஃபத்தை புகழ்ந்து கூறுவதோ கிலாஃபத் தொடர்பாக கவிதைகள் பாடுவதோ எந்த பலனையும் தராது. மக்கள் உலகியல் தலைவர்களுடனும் உணர்வுப் பூர்வமான தொடர்பை வைத்துள்ளார்கள். உலக நோக்கங்களுக்காகவும் தியாகங்கள் செய்கின்றார்கள். ஆனால், இறைவனின் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அல்லாஹ்வின் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பதற்காகவும் எத்தனை பேர் தியாகங்கள் செய்கின்றார்கள்?

வெளிப்படையாக தியாகங்கள் செய்வதாக நீங்கள் பார்க்கின்ற இந்த மக்கள் செய்வது அனைத்துமே பெயருக்காகவும், புகழுக்காகவும் செய்யப்படும் தியாகங்களேயாகும். ஏனென்றால், அவை இறைவன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் போதனைக்கு மாற்றமானவையாக இருக்கின்றது. இவர்கள் எத்தகைய ஆலிம்களையும் தலைவர்களையும் பின்பற்றிச் செல்கின்றார்கள் என்றால் இத்தகைய ஆலிம்களும் தலைவர்களும் இறைவன் புறமிருந்து வழிகாட்டலைப் பெற்று நேர்வழிகாட்டலைத்தான் விரும்புகின்றார்கள். இந்தக் காலத்தில் அத்தகைய ஒரு வழிகாட்டியாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்தான் இருக்கின்றார்கள். அவர்களை தவிர வேறு எவரும் அத்தகைய வழிகாட்டியாக இல்லை.

எனவே, உண்மையான தியாகத்தின் உணர்வையும் அதன் நோக்கங்களையும் பெற்று கொள்வதற்காக வழிகளை நிர்ணயிக்கின்ற நற்பாக்கியம் அஹ்மதிகளின் பங்கில் மட்டும் தான் இருக்கின்றது. இதற்காக திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் ஒளியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நம் முன்னால் எடுத்து வைத்துள்ள போதனைகளை புரிந்தவாறு அதனை செயல்படுத்தவும் அதில் தொடர்ந்து நிலைநிற்கவும் நாம் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான அஹ்மதியாக ஆக முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நம்மிடம் எதை எதிர்பார்க்கின்றார்கள்? **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் [அலை] அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.**

உண்மையான தூய நல்லொழுக்கமானது நேர்மையை கைகொள்ளும் தூய நல்லடியார்களின் அற்புதமாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் அதற்கு இணையாக வேறு எவரும் இருக்க முடியாது. ஏனென்றால், எவர் இறைவனிடம் தன்னை அர்ப்பணிப்பதில்லையோ அவர் மேலிருந்து கிடைக்கும் சக்தியை பெறுவதில்லை. இதனால் தூய நல்லொழுக்கத்தை அவர் பெற்று கொள்வது சாத்தியமல்ல.

எனவே, நீங்கள் உங்கள் இறைவனிடம் தூய்மையான தொடர்பை உருவாக்குங்கள். எள்ளி நகையாடுதல், பரிகாசம் செய்தல், தீய வார்த்தைகளை பேசுதல், காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வது, பேராசை, பொய், தீய செயல், தீய பார்வை, தீய எண்ணம், உலகை வணங்குதல், அகங்காரம், தற்பெருமை, சுய நலம், பிறருக்கு தீங்கு விளைவித்தல்,வறட்டு வாதங்களை செய்வது, ஆகிய அனைத்தையும் நீங்கள் கைவிட்டுவிடுங்கள். அப்போதுதான் எல்லாவிதமான அருட்கொடைகளும் உங்களுக்கு வானத்திலிருந்து கிடைக்கும். அதாவது நேர்மையான நல்லடியார்களால் ஏற்படும் அற்புதங்களை நீங்களும் செய்து காட்ட முடியும். உங்களை மேலே ஈர்த்து கொண்டு செல்கின்ற அந்த உயர்வான சக்தியை நீங்கள் பெற்று கொள்ளாத வரை உங்களுக்கு வாழ்வை வழங்குகின்ற அந்த பரிசுத்த ஆவி உங்களுக்குள் நுழையாத வரை நீங்கள் மிகவும் பலகீனமானவர்களாக இருக்கின்றீர்கள். மேலும் நீங்கள் இருளில் வீழ்ந்து கிடக்கின்றீர்கள். இந்நிலையில் நீங்கள் எந்த ஒரு துன்பத்தையும் எதிர்த்து நிற்க முடியாது. அவ்வாறே செல்வமும் மகிழ்ச்சியும் கிடைக்கின்ற சமயத்தில் தற்பெருமையிலிருந்தும் அகங்காரத்திலிருந்தும் நீங்கள் உங்களை காப்பாற்றி கொள்ள முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் வானத்தின் புத்திரர்களாக இருக்க வேண்டும் (அதாவது ஆன்மீக வாதிகளாக இருக்க வேண்டும் – மொழிபெயர்ப்பாளர்) பூமியின் புத்திரர்களாக இருக்க கூடாது. (அதாவது பௌதீகத்தில் மூழ்கியவர்களாக இருக்க கூடாது – மொழிபெயர்ப்பாளர்)

நீங்கள் ஒளிகளின் வாரிசுகளாக இருக்க வேண்டும். இருள்களை நேசிப்பவர்களாக இருக்க கூடாது. அப்போதுதான் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்தும் தப்பித்து நீங்கள் அமைதியின் கீழ் வர முடியும். இந்த உயர்வான தரத்தையும் இலக்கையும் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள்.

மனிதன் பலவீனமானவன். வாழ்க்கையில் உயர்வும், தாழ்வும் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கும். எனவே, இந்த இலக்கை அடைவதற்காக அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறு தொடர்ந்து இவ்வழியில் அதிகமாக முயற்சி செய்வது ஒரு அஹ்மதிக்கு அவசியமானதாகும். அல்லாஹ்விடமிருந்து உதவியை பெறுவதற்காகவும் அந்த உயர்வான நல்லொழுக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ள வழிமுறை களையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கூறியுள்ளார்கள். அந்த இறைவனிடம் தூய தொடர்பை உருவாக்குவதேயாகும். களங்கமற்ற தூய உறவை அல்லாஹ்வுடன் நாம் ஏற்படுத்தி கொள்ள வேண்டும். அந்த தொடர்பை நாம் எப்படி உருவாக்க முடியும்? நமது வாழ்வின் நோக்கத்தை நாம் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். நமது படைப்பின் நோக்கம் எது என்பதை இறைவனே கூறியிருக்கின்றான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

**வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லி யஃபுதூன்** – அதாவது நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காக மட்டுமே படைத்துள்ளேன். இது மிகப்பெரிய ஒரு நோக்கமாக இருக்கின்றது. இந்த நோக்கத்தை பெற்றுக் கொள்வதற்காக களங்கமற்ற தூய உள்ளத்துடன் இறைவனுக்காக மட்டும் முயற்சிகளை நாம் செய்து வந்தால் எந்த தீய செயல்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு அடையாளம் காட்டியுள்ளார்களோ அவற்றை செய்யாமலிருப்பதன் பக்கமும் நமக்கு கவனம் இருக்கும். சமுதாயத்தின் உரிமைகளை செலுத்துபவர்களாகவும் நாம் இருப்போம். இந்த நற்செயல்கள் மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தரக்கூடியவையாக அமையும். பொருத்தமான நற்செயல்களை செய்பவர்களுக்குத்தான் கிலாஃபத்தின் அருட்கொடை கிடைப்பதற்கான வாக்குறுதியும்

தரப்பட்டிருக்கின்றது. அல்லாஹ்வை முழுமையாக வணங்குபவர்கள்தான் அவனுக்கு இணை வைப்பதிலிருந்தும் முற்றிலும் விலகியிருப்பவராகவும் தூயவராகவும் இருக்க முடியும். இந்த அருட்கொடையை நாம் நம்மிடம் நிலைநாட்ட வேண்டும் என்று விரும்பினால் நாம் நமது படைப்பின் நோக்கத்தை நினைவில் வைக்க வேண்டியது அவசியமாகும். இறைவணக்கம் செய்வதற்காக அல்லாஹ் நமக்கு கூறியுள்ள வழிமுறைகளில் எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமானது ஐவேளை தொழுகைகளாகும்.

எனவே ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுவரும், முதியவரும் தமது ஐவேளை தொழுகையை பாதுகாக்க முடியவில்லையென்றால் களங்கமற்ற தூய உள்ளத்துடன் அல்லாஹ்வின் முன்பு குனியவில்லை என்றால் நமக்கு கூறப்படடுள்ள அந்த பொருத்தமான நற்செயல்களையும் நம்மால் செய்ய முடியாமல் ஆகி விடும். இறைவணக்கங்களுடன் நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ள அந்த அருட்கொடைகளில் இருந்தும் நாம் பங்குபெற முடியாமல் ஆகி விடுவோம். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றார்கள்?

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:</u>**

தங்களை எனது ஜமாஅத் சார்ந்தவர்களாக கருதும் மக்களே! எப்போது உண்மையிலேயே தக்வாவின் வழியில் நீங்கள் முன்னேறிச் செல்வீர்களோ அப்போதுதான் வானத்தில் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக கருதப்படுவீர்கள். எனவே, நீங்கள் உங்களது ஐவேளை தொழுகைகளையும் இறைவனை நேரில் காண்பது போன்று அச்சத்துடனும் உருக்கத்துடனும் நிறைவேற்றி வாருங்கள்.

எனவே, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்ட பிறகு தக்வாவில் முன்னேற்றத்தைப் பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய நிபந்தனையானது தொழுகைகளை நிறைவேற்றுவதாகும். ஒரு சுமையை தலையிலிருந்து இறக்கி வைப்பது போன்று நாம் தொழுகைகளை நிறைவேற்றுவது இருக்கக் கூடாது. மிக விரைவாக தொழுது முடித்து விட்டு பிறகு அங்கிருந்து சென்று தமது உலகப் பணிகளில் மூழ்கிவிடும் அந்த நிலை இருக்கக் கூடாது. மாறாக, நீங்கள் இறைவனை நேரில் காண்பது போன்று உங்கள் தொழுகைகளை நிறைவேற்ற வேண்டும் என்றே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கூறியுள்ளார்கள். பாருங்கள்! நாம் ஒரு பெரிய மனிதர் முன்னால் நிற்கும் போது ஒருவிதமான அச்சம் நமக்கு ஏற்படுகின்றது. அல்லாஹ் மிகப்பெரியவனாவான். அவனை வணங்கியவாறு நாம் இறைவனை காண்கின்றோம் என்ற சிந்தனையுடன் நாம் தொழும்போது எந்த அளவு அச்சத்தின் நிலையில் நாம் இருக்க வேண்டும்? இந்த நிலைமைதான் நம்மை இறைவனை வணங்குகின்ற தூய அடியார்களாக மாற்றக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், ஒவ்வொருவரிடமும் இந்த நிலைமை ஒரு நொடிப்பொழுதில் ஏற்பட்டுவிட முடியாது என்பதனால் தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீங்கள் தொழுகின்றபோது நீங்கள் இறைவனை காண்கின்றீர்கள் என்ற நிலை உங்களிடம் உருவாகவில்லை என்றால் குறைந்தபட்சம் நீங்கள் இறைவனை காண்கின்றீர்கள் என்ற உணர்வுடன் நீங்கள் தொழ வேண்டும். எல்லா விதமான ஆற்றல்களுக்கும் எஜமானனான அந்த இறைவன் ஒவ்வொருவரது உள்ளத்தின் நிலையையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான். எல்லா ஆற்றல்களுக்கும் உறைவிடமான அந்த இறைவன் நம்மை பார்க்கின்றான் என்ற சிந்தனை நம்மிடம் உருவாகும்போது அவனை முழுமையாக வணங்குவதன் பக்கம் நமக்கு கவனம் ஏற்படும். இவ்வாறு தூய்மையான உள்ளத்துடன் இறைவனின் கருணையை ஈர்க்கும் விதத்தில் அவன் முன்பு குனிந்த நிலையில் நமது இறைவணக்கம் அமையும். உலக வியாபாரங்களுக்கும் உலக இன்பங்களுக்கும் இரண்டாவது இடம் தரும் வகையில் நமது தொழுகைகளுக்கு முன்னுரிமை வழங்குபவர்களாக நாம் ஆகி விடுவோம். இந்த விஷயங்கள்தான் நம்மை வானத்தின் புத்திரர்களாக ஆக்கும். இந்த விஷயங்கள்தான் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக ஆக்கி விடும்.

எவர்களுக்கு இறைவணக்கங்கள் மூலமாக இந்த நிலை உருவாகவில்லையோ அவர்கள் அவநம்பிக்கையடைந்து ஒருபுறம் அமர்ந்துவிட வேண்டும் என்பதற்காக இந்த விஷயங்கள் கூறப்படவில்லை. நாம் இந்த உயர்வான தரத்தை பெறவுமில்லை. நம்மால் இந்த உயர்வான தரத்தை பெறவும் முடியாது.

இதனால் நாம் ஜமாஅத்தை விட்டு வெளியேறியவர்களாக ஆகிவிடுவோம் என்று ஒரு சிலர் கருதலாம். மாறாக, இந்த உயர்வான தரத்தைப் பெற நாம் முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காகவே நான் இவற்றை கூறுகின்றேன். முன்னேறிச் செல்கின்ற ஜமாஅத்துகளுக்கு எப்போதுமே மிகப்பெரிய இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. அவற்றை அடைந்த பிறகு இறைவனின் அருட்கொடைகளும், அவனது கருணையும் அந்த ஜமாஅத்துகளின் மீது இறங்குகிறது. அல்லாஹ் கூறுகின்றான்:

**வ ரஹ்மதி வஸிஅத் குல்ல ஷய்யின்** – எனது கருணை ஒவ்வொரு பொருளையும் சூழ்ந்து நிற்கின்றது.

எனவே, நமக்கு கிடைக்கின்ற ஒவ்வொன்றும் அல்லாஹ்வின் அருளால்தான் கிடைக்கின்றது. நன்மைகளில் முன்னேறிச் செல்லும்படி அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டுள்ளான். எனவே, இவற்றை பெற முடியாததால் நீங்கள் ஒருபோதும் அவநம்பிக்கை அடைய வேண்டாம். மாறாக, அல்லாஹ் தனது அருளாலும் கருணையாலும் நம்மை முன்னேற்றமடையச் செய்வான்.

எந்த அருட்கொடைகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்திற்கு அல்லாஹ் வழங்குவதாக வாக்களித்துள்ளானோ அந்த அருட்கொடைகள் ஜமாஅத் என்ற நிலையில் உங்களுக்கும் கிடைக்க வேண்டும். இறைவணக்கத்தில் மிக உயர்வான இடத்தை பெற்றவர்கள் ஜமாஅத்தில் அதிகமாக இருக்கின்றர்கள். இரவுகளில் எழுந்து நஃபில் தொழுகை தொழுபவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். ஜமாஅத்திற்காக அவர்கள் துஆ செய்து கொண்டிருக்கின்றர்கள். தக்வாவில் முன்னேறுபவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் மூலமாக அல்லாஹ் ஒட்டுமொத்த ஜமாஅத்தின் மீதும் தனது அருளைப் பொழிகின்றான். அந்த அருள்களுக்கு காரணமாக அவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் கூறியுள்ளபடி தனது ஜமாஅத்தில் பெரும்பாலான மக்கள் இந்த உயர்வான தரத்தில் இருப்பதைப் பார்க்க விரும்புகின்றார்கள். அதன் மூலமாக ஜமாஅத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் அல்லாஹ்வுடன் ஒரு தனிப்பட்ட தொடர்பு ஏற்பட்டு விட வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக முயற்சி செய்பவர்களுக்கு கிடைக்கின்ற அருள்கள் ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் கிடைக்க வேண்டும். எந்த அளவு ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரது தக்வாவின் தரம் வளர்ச்சி அடையுமோ அந்த காட்சிகளை காண்பவர்களாக இருப்போம். அல்லாஹ் கூறியுள்ள நற்செயல்களை செய்வதன் மூலம் மற்றவர்களையும் நமது சூழலின் தாக்கத்தின்கீழ் ஈர்ப்பவர்களாக நாம் ஆகி விடுவோம். நமது இந்த இறைவணக்கங்கள் மூலமாக இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் நாம் செய்து வரும் முயற்சிகள் நமக்கு பலன் தரக்கூடியதாக இருக்கும்.

இங்குள்ளவர்கள் பலரும் என்னை சந்திக்கின்ற சமயத்தில் அல்லாஹ்வின் அருளால் அவர்கள் எல்லாரும் மனத்தூய்மையிலும் பற்றிலும் நிறைந்திருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என்ற உறுதியில் அவர்களது உள்ளம் நிரம்பியிருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கையுள்ளவர்களாகவும் அவனது திருப்தியைப் பெற முயற்சி செய்பவர்களாகவும் அவர்களை என்னால் பார்க்க முடிந்தது. இது அவர்களது பேச்சிலிருந்து எனக்கு தெரிய வந்தது. பல பெண்களும் ஆண்களும் தங்கள் பிள்ளைகள் மார்க்கப்பற்றில் முன்னேறி வருவது தொடர்பான விஷயங்களையும் என்னிடம் பரிமாறிக் கொண்டார்கள். அவர்களுக்காக துஆ செய்யும்படி என்னிடம் கூறினார்கள். கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் அவர்களுக்கு உறுதியான தொடர்பு இருப்பதுதான் இதற்கு காரணமாக இருக்கின்றது. இந்த தொடர்பையும் இந்த உணர்வையும் ஒருபோதும் நீங்கள் மரணித்துவிட விட்டுவிட வேண்டாம். மாறாக, ஒவ்வொரு நாளும் இதில் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் பெற முயற்சி செய்ய வேண்டும். இதற்காக இறைவனது இந்த கட்டளையை எப்போதும் நீங்கள் நினைவில் வைக்க வேண்டும். ஏக இறைவனை வணங்குவதும் நற்செயல்களை செய்வதும் ஒரு மூஃமினுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். மறைவாக இறைவனுக்கு இணை வைக்கும் காரியங்களிலிருந்தும் நீங்கள் உங்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

இங்கு பல்றேு மதங்களைச் சார்ந்தவர்களுடன் உங்களுக்கு தொடர்பு இருக்கின்றது. அவர்களுடன் உறவு வைப்பதன் மூலம் சில தவறான சடங்குகள் நம்மவர்களிடமும் வந்து விடுகிறது. அவற்றிலிருந்தும் எப்போதும் உங்களை காப்பாற்றி வைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், இந்த விஷயங்கள் பிறகு படிப்படியாக ஷிர்க்கின் பக்கம் நமமை கொண்டு சென்று விடும். இங்கு குடியேறியுள்ள மற்ற மக்கள் போன்றே அஹ்மதிகளும் அல்லாஹ்வின் அருளால் நூறு சதவீதம் படிப்பறிவுள்ளவர்களாக இருக்கின்றார்கள். உங்களது இந்த கல்வியை உங்களது மார்க்கத்தை பாதுகாப்பதற்காக நீங்கள் பயன்படுத்த வேண்டும். மார்க்கக் கல்வியைப் பெறுவதும் உங்களது ஒரு முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். அதன் மூலம் உங்கள் ஈமானை பாதுகாத்துக் கொள்வதுடன் உங்களது பிள்ளைகளையும் மார்க்கத்துடன் தொடர்புடையவர்களாக ஆக்குவதன் மூலம் அவர்களை பாதுகாப்பவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். இதன் மூலம் எதிர்கால சந்ததிகளின் ஈமானும் எப்போதும் வளர்ச்சி அடைந்து வருவதற்கு நீங்கள் காரணமாக இருப்பீர்கள். பிறகு இந்த மார்க்க அறிவைப் பயன்படுத்தியவாறு இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் பணியிலும் முக்கிய பங்கு வகிப்பவர்களாக நீங்கள் உருவாக வேண்டும். இந்த மண்ணில் இந்துக்கள் மட்டுமல்லாமல் யூதர்களும் குடியேறியிருக்கிறார்கள். பிறகு அவர்களை தேடியவாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஒரு ஹவாரியான தாமஸ் அவர்களும் இங்கு வந்துள்ளார்கள். கிறிஸ்தவமும் இங்கு பரவியது. பிறகு இங்கு எல்லாருக்கும் நன்றாக தெரிந்திருப்பதுபோன்றே இஸ்லாத்தின் துவக்க காலகட்டத்திலேயே ஹஸ்ரத் மாலிக் பின் தீனார் (ரலி) அவர்கள் மூலமாகவும் அரேபியாவிலுள்ள வியாபாரிகள் மூலம் இஸ்லாமும் இங்கு பரவி விட்டது. இப்போது அல்லாஹ் உங்களுக்கு முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொள்வதற்கான தவ்ஃபீகை வழங்கியுள்ளான். எனவே, இந்த தூதுச் செய்தியை சிறப்பான முழுமையான கடினமான முயற்சிகளுடன் மற்றவர்களுக்கு எட்ட வையுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின்கீழ் இந்த பகுதியில் குடியேறியுள்ளவர்களைக் கொண்டு வர முயற்சி செய்யுங்கள். உலகின் உண்மையான இரட்சிப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் மக்களை ஒன்றுதிரட்டுவதில்தான் இருக்கின்றது. இதற்காகத்தான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இந்த காலத்தில் அனுப்பி வைத்துள்ளான். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எந்த தூதுச் செய்தியை முழு உலகிலும் பரவும்படி செய்வதை அல்லாஹ் விதித்துள்ளானோ அதனை முழுமையான முயற்சியுடன் உலகம் முழுவதும் பரப்புவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். உலகின் கவனம் முன்பை விட அதிகமாக அஹ்மதிய்யத்தின் பக்கம் திரும்பியிருக்கிறது. இதனை உங்களது இந்த பகுதியிலும் மீடியா மூலம் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். விஷயங்களைக் கேட்பதிலும் எதிர்ப்பதிலும் உலகின் ஒரு சிறப்பான கவனம் அஹ்மதிய்யத்தின் பக்கம் திரும்பி இருக்கின்றது.

எனவே, உங்களிடம் ஒரு தூய மாறுதலை உருவாக்கியவாறும் அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறும் நாம் முன்பை விட அதிகமாக நமது பொறுப்புகளை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். எனக்கு துஆவின் ஆயுதம் வழங்கப்பட்டுள்ளது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். எனவே, துஆக்களின் பக்கம் நாம் மிகவும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். இதுதான் நமது வெற்றிக்கு காரணமாக அமையும். அல்லாஹ் இதற்கான தவ்ஃபீகை நமக்கு வழங்குவானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT CALICUT MOSQUE, KERALA**
**ON 28.11.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**